# தமிழ்மொழி

⇒ **செம்மொழி தமிழ்**

**ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரோன் றேனையது**
**தன்னே ரிலாத் தமிழ் – தண்டியலங்காரம்**

- ✓ எளிதில் பேசவும், எளிதில் பாடவும், இயற்றவும் இயற்கையாக அமைந்தது தென்மொழியாகிய தமிழ் ஒன்றே.

**– வள்ளலார் கூற்று**

- ✓ உலக மொழிகளில் சிறந்தது தமிழ் மொழியே

**–அறிஞர்கள் கூற்று**

- ✓ திருந்தி செவ்வியல்புகள் பொருந்திய மொழிகள் செம்மொழிகள்.
- ✓ கிரேக்கம், இலத்தின், சமஸ்கிருதம், சீனம், எபிரேயம், அரபு, ஹீப்ரு ஆகிய செம்மொழிகள்

**– மொழியியல் அறிஞர் ச.அகத்தியலிங்கம் கூற்று**

- ✓ கிரேக்கம் இலத்தீன் சமஸ்கிருதம் பேச்சு வழக்கில் தற்போது இல்லாத மொழிகள்.

⇒ **செம்மொழி தமிழின் சிறப்பு**

- ✓ உலகில் இன்று வழங்கும் மொழிகள் தோன்றுவதற்கு முன்பே எண்ணற்ற இலக்கண, இலக்கிய வளங்களை கொண்டதாக விளங்கியது தமிழ் மொழி.

⇒ **தமிழை செம்மொழி என நிலைநாட்டும் சான்றுகள்**

- ➢ தொல்காப்பியம்
- ➢ பத்துப்பாட்டு
- ➢ எட்டுத்தொகை
- ➢ பதினெண் கீழ்க்கணக்கு
- ➢ சிலப்பதிகாரம்
- ➢ மணிமேகலை
- ➢ முத்தொள்ளாயிரம்
- ➢ இறையனார் அகப்பொருள்

- ✓ பதினெண் கீழ்க்கணக்கில் திருக்குறளுக்கு இணையான வேறு நூல் உலகில் இல்லை.

“தமிழ்மொழி அழகான சித்திர
வேலைப்பாடமைந்த வெள்ளித்தட்டு;
திருக்குறள் அதில் வைக்கப்பட்டுள்ள
தங்க ஆப்பிள்; தமிழ் என்னை ஈர்த்தது;
குரலோ என்னை இழுத்தது”

**– டாக்டர் கிரவுல் கூற்று .**

## செந்தமிழ் அந்தாதி

**செந்தமிழே செங்கரும்பே செந்தமிழர் சீர்காக்கும்**
**நந்தா விளக்கனைய நாயகியே – முந்தை**
**மொழிக்கெல்லாம் மூத்தவளே மூவேந்தர் அன்பே**
**எழில் மகவே எந்தம் உயிர் .**

**உயிரும்நீ மெய்யும்நீ ஓங்கும் அறமாம்**
**பயிரும்நீ இன்பம்நீ அன்புத் தருவும்நீ**
**வீரம்நீ காதல்நீ ஈசன் அடிக்குந்நல்**
**ஆரம்நீ யாவும்நீ யே!**

**– து.அரங்கன்.**

⇒ **தமிழின் தனிப் பெருந்தன்மைகள்**

- ✓ தொன்மை உலகின் மிகப் பழமையான நிலப்பகுதி குமரிக்கண்டம் அந்நில பகுதி கடல்கோளால் மூழ்கிவிட்டது.அத்தொன்னி நிலத்தில் தான் தமிழ் தோன்றியதென தண்டியலங்காரம் கூறுகிறது.

⇒ **மென்மை**

- ✓ மெல்லோசை மொழியாய் இருப்பதினாலே இன்றும் இளமை மாறத் தன்மையுடன் கன்னித்தமிழாய் இருந்து வருகிறது.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

⇒ **தாய்மை**

✓ பெற்றோரைக் குறிக்கும் அம்மை, அப்பன் என்ற நாஞ்சில் நாட்டு தமிழ் சொற்கள் வடமொழி உட்பட உலகம் மொழிகள் பலவற்றிலும் வடிவு திரிந்து வழங்கி வருகின்றன .

⇒ **தூய்மை**

✓ தமிழ் பிற மொழி துணையின்றித் தனித்து இயங்குவது மட்டுமின்றி, தலைத்தோங்கவும் செய்யும்.

**– கால்டுவெல் கூற்று.**

⇒ **செம்மை**

✓ தமிழில் உள்ளது போல இலக்கண வரம்பும், திருந்திய சொற்களின் வடிவமும் வேறு எந்த மொழியிலும் இல்லை அதனாலேயே **செந்தமிழ்** எனப்பட்டது.

⇒ **மும்மை**

✓ இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்ற முத்தமிழும் முதல் சங்க காலத்தில் இருந்து வழங்கி வரலாயிற்று.

⇒ **இயற்கை வளர்ச்சி**

✓ தமிழில் இடுகுறிப் பெயர்கள் குறைவு. ஒருமை பன்மை என்னும் இருவகை எண்கள் மட்டுமே உண்டு. தமிழில் உயிர்களுக்கு மட்டுமே பால் வேறுபாடு உண்டு. பொருள்களுக்கு பால் வேறுபாடு இல்லை .

⇒ **இலக்கண நிறைவு**

✓ எல்லா மொழிகளிலும் எழுத்துக்கும், சொல்லுக்கும், மட்டுமே இலக்கணம் உண்டு. தமிழில் வாழ்வியலுக்கான பொருளிலக்கணமும் உண்டு. அதுவும் 'அகம்', 'புறம்' என இருவகையாக பகுக்கப்பட்டுள்ளது .

⇒ **செய்யுள் சிறப்பு**

✓ பண்டைத் தமிழ் இலக்கியங்கள் மற்றும் இலக்கணங்கள் யாவும் செய்யுள் வடிவிலேயே இருந்தன. கலிப்பா முதலான செய்யுள் வகைகள் வேறு எந்த மொழியிலும் இல்லை .

⇒ **அணிச்சிறப்பு**

✓ உவமை, உருவகம் முதலிய அணி வகைகளை பயன்படுத்தி பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன .

⇒ **நூல் சிறப்பு**

✓ ஆயிரக்கணக்கான தமிழ் நூல்கள் இயற்கை சீற்றங்களால் அழிந்து போயின. கிடைத்தனவற்றுள் சங்க கால நூல்கள், தமிழர்களின் மொழியையும் பண்பாட்டையும் விளக்குகின்றன. **எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே** என்பது தொல்காப்பிய நூற்பா.

⇒ **மொழி குடும்பம்**

✓ தனக்கென தனி சிறப்பும், பழமொழிகள் தோன்றி வளர அடிப்படையாகவும் உள்ள மூல மொழியும், அதிலிருந்து தோன்றி வளர்ந்த கிளை மொழிகளும், ஒரே மொழி குடும்பம் எனப்படும்.

✓ இந்தியாவில் பேசப்படும் மொழி குடும்பங்கள் நான்கு. இந்தோ ஆசிய மொழிகள், திராவிட மொழிகள், ஆஸ்திரோ ஆசிய மொழிகள், சீன, திபெத்திய மொழிகள்.

✓ நம் நாட்டில் 1300 க்கு மேற்பட்ட மொழிகளும் அதன் கிளை மொழிகளும்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

பேசப்பட்டு வருகின்றன. ஆதலால் இந்திய நாட்டை மொழிகளின் காட்சிசாலை என்று குறிப்பிட்டுள்ளார்,மொழியியல் பேராசிரியர் ச. அகத்தியலிங்கம்.

⇒ **திராவிட மொழி வகைகள்**

**1. தென் திராவிடம்**

- தமிழ்
- மலையாளம்
- கன்னடம்
- குடகு
- துளு
- கோத்தா
- தோடா
- கொரகா
- இருளா

**2. நடுத் திராவிடம்**

- தெழுங்கு
- கூயி
- கூவி(குவி)
- கோண்டா
- கோலாமி (கொலாமி)
- நாய்க்கி
- பெங்கோ
- மண்டா
- பா்ஜி
- கதபா
- கோண்டி
- கோயா

**3. வடதிராவிடம்**

- குரூக்
- மால்தோ
- பிராகுய் (பிராகுயி)

✓ மேற்கண்ட பட்டியலில் உள்ள 24 மொழிகள் தவிர அண்மையில் கண்டறியப்பட்ட எருகலா,தங்கா,குறும்பா,சோழிகா ஆகிய மொழிகளையும் சேர்த்து திராவிட மொழிகள் மொத்தம் 28 என்பர்.

⇒ **திராவிட மொழிக் குடும்பங்கள்**

✓ இன்று 23 க்கும் மேற்பட்ட திராவிட மொழிகள் உள்ளன.

⇒ **வகைகள்**

✓ திராவிட மொழிகள், நடுத் திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள்.

தமிழே உயிரே வணக்கம்
தாய் பிள்ளை உறவம்மா, உனக்கும் எனக்கும்
அமிழ்தே நீ இல்லை என்றால்
அத்தனையும் வாழ்வில் கசக்கும், புளிக்கும்
தமிழே உன்னை நினைக்கும்
தமிழன் என் நெஞ்சம் இனிக்கும் இனிக்கும்.

**– கவிஞர் காசி ஆனந்தன்.**

⇒ **தென் திராவிட மொழிகள்**

- தமிழ்
- மலையாளம்
- கன்னடம்
- குடகு
- துளு
- தோடா
- கோத்தா
- கொரக்கா
- இருளா

⇒ **நடு திராவிட மொழிகள்**

- தெலுங்கு
- கோண்டி
- கோயா
- கூயி
- கூவி
- கோலாமி
- பா்ஜி
- கதபா
- கோண்டா
- நாயக்கு
- பெங்கோ
- முண்டா

⇒ **வட திராவிட மொழிகள்**

- குரூக்
- மால்தோ
- பிராகுய்

✓ இவற்றுள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கும் **திராவிட பெரு மொழிகள்** எனப்படும்.

✓ உலக நாடுகளின் பழமையான நாகரீகங்களுள் இந்திய நாகரீகமும் ஒன்று.

✓ திராவிடம் என்ற சொல்லை முதன் முதலில் உருவாக்கியவர் குமரில பட்டா் அதனை பயன்பாட்டிற்கு கொண்டு வந்தவர் கால்டுவெல்.

✓ மொழியியல் அறிஞா்கள் தமிழையும், அதன் கிளை மொழிகளான மலையாளம், திராவிடம்,


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

கன்னடம் ஆகிய தென்னிந்திய மொழிகளை தமிளியன் அல்லது தமுலிக் என்று வழங்கினர்.

- ✓ இவ்வின மொழிகள் அனைத்தையும் இணைத்து திராவிட என்னும் சொல்லை தாம் கையாண்டதாக கால்டுவெல் கூறியுள்ளார்.
- ✓ திராவிட மொழிகளின் உயிர் எழுத்துக்களில் உள்ள குறில், நெடில், வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்த துணை செய்கின்றன.

⇒ **<u>எடுத்துக்காட்டு</u>**

- அடி – அளவு, அடித்தல், அடி எடுத்து வைத்தல்
- ஆடி – கண்ணாடி மாதம்
- வளி – காற்று
- வாளி – அம்பு

⇒ **<u>ஹீராஸ் பாதிரியார் கூற்று</u>**

- ✓ திராவிட என்னும் சொல்லை தமிழ் என்னும் சொல்லிலிருந்து உருவானது. தமிழ் → தமிழா தமிலா → டிரமிலா → ட்ரமிலா → த்ராவிடா → திராவிடா என உருவாயிற்று.
- ✓ திராவிட மொழிகளில் மிகவும் தொன்மையான பண்பட்ட மொழி தமிழாகும். மூலத்திராவிட மொழியின் வடிவத்தையும், மொழி கூறுகளையும், வேர்களையும் தமிழ் கொண்டுள்ளது.

⇒ **<u>செம்மொழி தகுதிக்கான அளவுகோல்கள்</u>**

- ✓ தொன்மை,
- ✓ தலைமை,
- ✓ செவ்வியல்.

⇒ **<u>தொன்மை சிறப்பு</u>**

- ✓ கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் தமிழ் மொழி தோற்றம் பெற்றிருத்தல் வேண்டும் என ஒரு பிரிவினரும், மத்திய தரை கடல் பகுதியில் இருந்து திராவிட இனமும், அவர்தம் மொழியும் இந்தியாவுக்கு வந்திருத்தல் வேண்டும் என மற்றொரு பிரிவினரும் கருதுகின்றனர்.
- ✓ ஆசிரியர் வருகைக்கு முன்னரே தமிழ் மொழி வழங்கி வருவதாக வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். தமிழ் மொழியில் இன்று நமக்கு கிடைத்துள்ள நூல்களுள் மிகப் பழமையானது தொல்காப்பியம்.
- ✓ தொல்காப்பியம் ஒரு இலக்கண நூல் என்பதால் இந்நூலுக்கு முன்பே பல இலக்கிய நூல்கள் இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவு.

⇒ **<u>தலைமை சிறப்பு</u>**

- ✓ திராவிட மொழிகள் அனைத்திற்க்கும் மூலமான மொழியை முன்னைத் திராவிட மொழி, மூலத்திராவிட மொழி, தொன்மை திராவிட மொழி என்று பல்வேறு சொற்களால் அழைப்பர்.
- ✓ ஏனைய திராவிட மொழிகள் தமிழில் இருந்து தோன்றி வளர்ந்தமையால் தமிழே மூல மொழியாகும்.
- ✓ 80 % அளவுக்கு திராவிட மொழிக் கூறுகளை கொண்டுள்ள ஒரே திராவிட மொழி தமிழ் மொழியாகும்.

⇒ **<u>செவ்வியல் சிறப்பு</u>**

- ✓ தொன்மை, தனித்தன்மை, மொழிகளின் தாய், சொல் வளம், இலக்கிய, இலக்கண வளம், சிந்தனை வளம், கலைவளம், பண்பாட்டு வளம் இவற்றுடன் பன்னாட்டு மொழியாகவும் விளங்கும் தமிழ் மொழியே



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

செவ்வியல் மொழி எனப்படும், இவையே செம்மொழிக்கான கூறுகளாக கருதப்படுகின்றன.

✓ இலெமூரியாக் கண்டம் எனப்படுவது கடல்கோளால் கொல்லப்பட்ட பழந்தமிழ் குமரி கண்டமாகும்.

✓ யுனெஸ்கோ நிறுவனம் அழிந்து வரும் பண்டைய ஓலைச்சுவடிகளை பாதுகாக்க பல நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

✓ திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியவர் கால்டுவெல்.

⇒ **சீர்மை மொழி**

✓ உயர்திணையின் எதிர்ச்சொல் தாழ்வினை என்று அமைய வேண்டும். ஆனால், தாழ்ந்து கூறாமல் அஃறிணை (அல்+ திணை) உயர்வல்லாத திணை என நம் முன்னோர் பெயரிட்டனர்.

✓ பாகற்காயை கசப்பு காய் என்று கூறாமல் இனிப்பு அல்லாத காய் (பாகு+ அல்+ காய் = பாகற்காய்) என வழங்கினர்.

⇒ **வளமை மொழி**

✓ பூவின் ஏழுநிலைகளுக்கும் தோன்றுவது முதல் உதிர்வது வரை தனித்தனி பெயர்கள் தமிழில் உண்டு.

✓ **அவையாவன;** அரும்பு, மொட்டு, முகை, மலர் அலர், வீ, செம்மல் மா என்ற ஒரு சொல்லுக்கு மரம், விலங்கு, பெரிய, திருமகள், அழகு, அறிவு, அளவு, அழைத்தல், துகள், மேன்மை, வயல், வண்டு போன்ற பல பொருள்கள் தமிழில் உள்ளன.

⇒ **வளர்மொழி**

✓ துளிப்பா, புதுக்கவிதை, கவிதை, செய்யுள் – **தமிழ் கவிதை வடிவங்கள்**

✓ கட்டுரை, புதினம், சிறுகதை – **தமிழ் உரைநடை வடிவங்கள்.**

⇒ **புதுமைமொழி**

✓ இணையம், முகநூல், புலனம், குரல் தேடல், தேடுபொறி, செயலி, தொடுத்திறை போன்றவை தமிழின் புது மொழிகள்.

**அன்பினில் இன்பம் காண்போம்;**
**அறத்தினில் நேர்மை காண்போம்;**
**துன்புறும் உயிர்கள் கண்டால்;**
**துரிசறு கனிவு காண்போம்;**
**வன்புகழ் கொடையிற் காண்போம்;**
**வலிமையைப் போரில் காண்போம்;**
**தன்பிறப் புரிமையாகத்**
**தமிழ்மொழிப் போற்றக் காண்போம்.**

**–புலவர் அ.முத்தரையனார் மலேசியக் கவிஞர்.**

⇒ **திராவிட மொழிகளின் பொது பண்புகள்**

✓ திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால் அவை பொதுவான அடிச் சொற்களைக் (வேர்களை) கொண்டிருக்கும்.

⇒ **எடுத்துக்காட்டு**

| அடிச்சொல் | திராவிட மொழிகள் |
|---|---|
| கண் | தமிழ் |
| கண்ணு | மலையாளம் |
| கன்னு | தெலுங்கு, குடகு |
| ஃகன் | குருக் |
| கெண் | பர்ஜி |
| கொண் | தோடா |

⇒ **எண்ணுப் பெயர்கள்**

| | |
|---|---|
| மூன்று | தமிழ் |
| மூணு | மலையாளம் |
| மூடு | தெலுங்கு |
| மூரு | கன்னடம் |
| மூஜி | துளு |



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

✓ தமிழ் வடமொழியின் மகளன்று; அது தனி குடும்பத்திற்கு உரிய மொழி. சமஸ்கிருத கலப்பின்றி அது தனித்து இயங்கும் ஆற்றல் பெற்ற மொழி. தமிழுக்கும் இந்தியாவின் பிற மொழிகளுக்கும் தொடர்பு இருக்கலாம்.

**-கால்டுவெல்.**

### ⇒ திராவிட மொழிகளில் சொல் ஒற்றுமை

| தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் | துளு | கூர்க் |
|---|---|---|---|---|---|
| மரம் | மரம் | மானு | மரம் | மர | மர |
| ஒன்று | ஒன்னு | ஒகடி | ஒந்து | ஒஞ்சி | – |
| நூறு | நூறு | நூறு | நூறு | நூது | – |
| நீ | நீ | நீவு | நீன் | ஈ | – |
| இரண்டு | ஈரெண்டு | ஈரெண்டு | எரடு | ரட்டு | – |
| நான்கு | நால், நாங்கு | நாலுகு | நாலு | நாலு | – |
| ஐந்து | அஞ்சு | ஐது | ஐது | ஐனு | – |

### ⇒ பால் பாகுபாடு

✓ திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டி பால் பாகுபாடு அமைந்துள்ளது. ஆனால் வடமொழியில் இவ்வாறு அமையவில்லை.

✓ உயிரற்ற பொருள்களும், கண்ணுக்கே புலப்படாத நுண் பொருள்களும் கூட ஆண் பெண் என பாகுபடுத்தப்படுகின்றன.

✓ ஜெர்மன் மொழியிலும் இத்தகைய தன்மையை காண முடிகிறது.

### ⇒ எடுத்துக்காட்டு

- கைவிரல்கள் – பெண்பால்
- விரல்கள் – ஆண்பால்
- வாய் – ஆண்பால்
- மூக்கு – பெண்பால்
- கண் – பொதுப்பால்

✓ திராவிட மொழிகளில் உயர்திணை உரிமையில் மட்டுமே ஆண்பால், பெண்பால் பகுப்பு முறை காணப்படுகிறது.

✓ அஃறிணையில் ஆண்பால் பெண்பால் பகுப்பு முறை என்பது தனித்தனி சொற்களால் குறிப்பிடப்படுகிறது.

### ⇒ எடுத்துக்காட்டு

- கடுவன்– ஆண் குரங்கு,
- மந்தி - பெண் குரங்கு
- களிறு - ஆண் யானை,
- பிடி – பெண் யானை.

### ⇒ வினைச்சொற்கள்

✓ ஆங்கிலம் போன்ற மொழிகளில் வினைச்சொற்கள் காலத்தை மட்டும் காட்டுமே தவிர திணை, பால், எண் ஆகிய வேறுபாட்டை காட்டுவதில்லை.

✓ திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் மலையாளம் தவிர இவற்றை தெளிவாக காட்டுகின்றன.

### ⇒ எடுத்துக்காட்டு

✓ வந்தான்– உயர்திணை ஆண்பால் உரிமை மலையாளத்தில் திணை, பால், எண் ஆகிவற்றை காட்டும் பாலறி கிளவிகள் இல்லை.

### ⇒ தமிழ் மொழி

தேனினும் இனிய நற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குகிற திகழ்ந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே
தானனி சிறப்புறந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே.

**– கா.நமச்சிவாயர்**

⇒ **மொழி ஆய்வு**

- ✓ வடமொழி ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது என ஆராய்ந்து முதன்முதலில் குறிப்பிட்டவர் அறிஞர் வில்லியம் ஜோன்ஸ் ஆவார்.
- ✓ 1816 ஆம் ஆண்டில் பேராசிரியர்கள் பாப், ராஸ்க், கிரிம் முதலியனோராலும் மொழி சார்ந்த பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
- ✓ தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், போன்ற மொழிகளை ஆராய்ந்து இவை தனி ஒரு மொழி குடும்பத்தை சேர்ந்தவை என்று முதன் முதலில் கூறியவர் பிரான்சிஸ் எல்லீஸ் ஆவார். இவற்றை ஒரே இனமாக கருதி தென்னிந்திய மொழிகள் எனவும் பெயரிட்டார்.
- ✓ பின்னர் மால்தோ, தோடா, கோண்டி மேலான மொழிகள் பற்றி ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு, இவை அனைத்தும் ஆரிய மொழிகளிலிருந்து மாறுபட்டவை என்று கூறியதோடு, இம்மொழிகள் அனைத்தையும் இணைத்து தமிழியன் என்று ஹோக்கன் என்பவர் பெயரிட்டார். மாஸ் முல்லரும் இக்கருத்தை ஏற்றுக் கொண்டார்.
- ✓ 1856 இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் கால்டுவெல் திராவிட மொழிகள் ஆரிய மொழி குடும்பத்தில் இருந்து வேறுபட்டவை என்றும் இம்மொழிகளின் தாக்கம் சமஸ்கிருத மொழியிலும் உள்ளது என்றும், திராவிட மொழிகளுள் இருக்கும் ஒற்றுமைகளையும் கூறியுள்ளார்.

⇒ **திராவிட மொழிகளின் ஆய்வில் ஈடுபட்ட ஆய்வாளர்களில் குறிப்பிட தகுந்தவர்கள்**

- ✓ ஸ்டேன்கனோ
- ✓ கே.வி.சுப்பையா
- ✓ எல்.வி.ராமசுவாமி
- ✓ பரோ
- ✓ எமினோ
- ✓ கமில் சுவலபில்
- ✓ ஆந்திரனோவ்
- ✓ தொ. பொ. மீனாட்சிசுந்தரம்

⇒ **உயர்தனிச் செம்மொழி**

**தமிழின் பெருமை :**

விருடை செம்மொழி தமிழ் மொழி உலகம்
வேரூன்றிய நாள் முதல் உயிர் மொழி

**- பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

- ✓ 3000 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த இலக்கிய வளமிக்க மொழி.
- ✓ "திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய துாய மொழி தமிழ்ச் செம்மொழி" **– பரிதிமாற் கலைஞர்**
- ✓ தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை, எண்மை, உண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை துாய்மை மும்மை செம்மை இயற்கை 16 செவ்வியல் தன்மைகளைக் கொண்ட செம்மொழி நம் மொழி.

**– தேவநேய பாவாணர்.**

- ✓ இனிமையும் நீர்மையும் தமிழின் ஆகும் **–பிங்கல நிகண்டு**
- ✓ உலகத் தாய்மொழி நாள் பிப்ரவரி 21
- ✓ தமிழை ஆட்சி மொழியாக கொண்ட நாடுகள் இலங்கை சிங்கப்பூர்.

⇒ **நிலைத்த மொழி**

- ✓ உலகில் உள்ள 6000-க்கும் மேற்பட்ட மொழிகளில் இலக்கிய இலக்கண வளமுடைய மொழிகள் 3000.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**திராவிட மொழிகள்**

| மொழி | இலக்கியம் | காலம் | ஆதாரம் |
|---|---|---|---|
| தமிழ் | சங்க இலக்கியம் | பொது ஆண்டுக்கு முன் ஐந்து முதல் பொது ஆண்டுக்குப் பின் இரண்டாம் நூற்றாண்டு அளவில். | தமிழ் இலக்கிய வரலாறு மு. வ. சாகித்ய அகாடமி |
| கன்னடம் | கவிராஜ மார்க்கம் | பொது ஆண்டுக்குப் பின் 9 ஆம் நூற்றாண்டு | இந்திய இலக்கணக் கொள்கைகளின் பின்னணியில் தமிழ் இலக்கணம் செ.வை.சண்முகம் |
| தெலுங்கு | ப்ராதம் | பொது ஆண்டுக்குப் பின் 11 ஆம் நூற்றாண்டு | – |
| மலையாளம் | ராம சரிதம் | பொது ஆண்டுக்குப் பின் 12–ம் நூற்றாண்டு | – |
| **மொழி** | **இலக்கணம்** | **காலம்** | **–** |
| தமிழ் | தொல்காப்பியம் | பொது ஆண்டுக்கு முன் 3–ம் நூற்றாண்டு | – |
| கன்னடம் | கவிராஜ மார்க்கம் | பொது ஆண்டுக்குப் பின் 9-ஆம் நூற்றாண்டு | – |
| தெலுங்கு | ஆந்திர பாஷா பூசனம் | பொது ஆண்டுக்குப் பின் 12–ம் நூற்றாண்டு | – |
| மலையாளம் | லீலா திலகம் | பொது ஆண்டுக்குப் பின் 15-ஆம் நூற்றாண்டு | மலையாள இலக்கிய வரலாறு சாகித்திய அகாதமி. |

- ✓ 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்று தொன்மை உடையவை தமிழ், சீனம், சமஸ்கிருதம், இலத்தின், ஹீப்ரோ, கிரேக்கம் ஆகியன.
- ✓ ஒரு மொழி நிலைத்து நிற்பதற்கு அம்மொழி பழமை வளமையுடன் பேச்சு மொழியாக, எழுத்து மொழியாக, நீதிமன்ற மொழியாக, பயிற்று மொழியாக நிலை பெற்றிருக்க வேண்டும்.
- ✓ இலக்கிய வளம், இலக்கண அரன், மிகுந்த சொல்வளம், வரலாற்று பின்னணி, தனித்து இயங்கும் மாண்பு, காலத்திற்கு ஏற்ற புதுமை என பல வகைகளிலும் சிறப்பு பெற்றிருக்க வேண்டும். தமிழ் மொழிக்கு இவை அனைத்தும் பொருந்தும்.

⇒ **திராவிட மொழி**

- ✓ இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, விஜி தீவு ஆகிய நாடுகளில் மட்டுமல்லாமல் தென்னாப்பிரிக்கா, மொரிஷியஸ், இங்கிலாந்து, கயானா, மடகாஸ்கர், ட்ரினி டாட், ஆஸ்திரேலியா,


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

கனடா போன்ற நாடுகளிலும் தமிழ் மொழி பேசப்படுகிறது.

✓ மொரிசியஸ், இலங்கை உள்ளிட்ட நாடுகளின் பணத்தாளில் தமிழ் மொழி இடம் பெற்றுள்ளது.

⇒ **செம்மொழி தகுதி பாடுகள்**

- தொன்மை
- பிற மொழி தாக்கம் இன்மை
- தாய்மை
- தனித்தன்மை
- இலக்கிய வளம்
- பொதுமை பண்பு
- நடுவு நிலைமை
- பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு.
- உயர் சிந்தனை
- கலை இலக்கியத் தன்மை வெளிப்பாடு.
- மொழிக் கோட்பாடு

என அறிவியல் தமிழறிஞர் முஸ்தபாவும் மொழி வல்லுனர்களும் வரையறுத்து உள்ளனர்.

## 1. தொன்மை

✓ முதல் மாந்தன் தோன்றிய குமரிக்கண்டத்தில் அவன் பேசிய மொழி தமிழ் மொழியே.

✓ அக்குமரிக்கண்டத்தில் முதல் இடைத்தமிழ் சங்கங்கள் அமைத்து தமிழ் மொழியை வளர்த்தனர் இப்பகுதி கடற்கோளால் கொல்லப்பட்டதால் மூன்றாம் தமிழ் சங்கம் இன்றைய மதுரையில் தோற்றுவிக்கப்பட்டது.

✓ இந்நிகழ்வு 3000 ஆண்டுகளுக்கு முன் நடந்தவை எனவே அதன் பெருமை கருதி **என்றுமுள தென்தமிழ்** என்றார் கம்பர்.

## 2. பிற மொழி தாக்கம் இன்மை

✓ ஆங்கிலத்தில் எண்ணற்ற பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளன. வடமொழிகளும் தமிழ், பிராகிருதம் பாலிமர் சொற்கள் கலந்துள்ளன. அதேபோல் தமிழிலும் பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளன.

✓ பிறமொழிச் சொற்களை நீக்கினால் பிற மொழிகள் இயங்காது, ஆனால் தமிழ் மொழி இயங்கும்.

✓ மிகுதியான வேறு சொற்களை கொண்ட தமிழ் மொழியில் புத்தம் புதிய கலைச் சொற்களை உருவாக்க இயலும்.

## 3. தாய்மை

✓ திராவிட மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம், முதலிய மொழிகளுக்கு தாய்மொழியாக விளங்குவது தமிழ்.

✓ பிராகுயி முதலான வடமொழிகளுக்கும் தமிழ் தாய்மொழியாக விளங்குகிறது. என்பார் **கால்டுவெல்.**

✓ 1800 மொழிகளுக்கு வேறு சொற்களையும், 180 மொழிகளுக்கு உறவு பெயர்களையும் தந்துள்ளது தமிழ்.

## 4. தனித்தன்மை

✓ இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளை கொண்டுள்ளது. அகம், புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் உள்ளது.

✓ திருக்குறள் மாந்தர் இனத்திற்கே நிதி முறைகளை வகுத்துள்ளது.

✓ தமிழ் மொழி இறவா இலக்கிய இலக்கண வளம் கொண்டு தனக்கென தனித்தன்மை கொண்டுள்ளது.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**5. இலக்கிய வளங்கள், இலக்கண சிறப்புகள்**

- ✓ உலக இலக்கியங்களில் முதன்மைப் பெற்றுள்ள சங்க இலக்கியங்களில் மொத்த அடிகள் 26 ஆயிரத்து 350.
- ✓ விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள் உலகில் வேறு எம் மொழியிலும் இல்லை. மொழியியல் – **அறிஞர் கமில் சுவலபில்– (செக் நாடு)**
- ✓ தமிழே மிகவும் பண்பட்ட மொழி அது தனக்கே உரிய இலக்கிய செல்வங்களை பெற்றிருக்கும் மொழி.

  **- மொழி நூலறிஞர் மாக்சுமுல்லர்.**

- ✓ தொன்மை கருத்துகளின் அடிப்படையில் எழுதப்படாமல் மக்கள் வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்திய சிறப்புடையவை சங்க இலக்கியங்கள் ஆனால் அவை **மக்கள் இலக்கியம்** எனப்பட்டது.
- ✓ தமிழ் இலக்கணம் படிக்க படிக்க விருப்பத்தை உண்டாக்குவது **– கெல்லட்.**
- ✓ நமக்கு கிடைத்த மிகப் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம் இது எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றூனுக்கும் இலக்கணம் வகுத்துள்ளது.
- ✓ தொல்காப்பியரின் ஆசிரியர் ஆன அகத்தியர் எழுத்து சொல் பொருள் யாப்பு அணி ஐந்து இலக்கணங்களையும் எழுதியுள்ளார் அகத்தியர் எனப்பட்ட அந்நூல் கிடைத்தில.

**6. பொதுமை பண்பு**

- ✓ ஒன்றே குலம், தீதும் நன்றும் விளைவது அவரவர் செயலால் போன்ற பொது அறங்களை தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

**7. நடுவுநிலைமை**

- ✓ சங்க இலக்கியங்கள் இனமொழி கடந்தவை. இயற்கையோடு இயந்தவை. உலகத்தார் ஏற்கும் பொது கருத்துகள் உடையவை. மக்கள் சிறப்புடன் வாழ ஏற்ற கருத்துகளை மொழிபவை.

**8. பண்பாடு கலை பட்டறிவு வெளிப்பாடு**

- ✓ சங்கப்படைப்புகள் மனித பட்டறிவின் முழு வெளிப்பாடுகள்; அறிவுடன் பொருந்தி வருவன அறத்தோடு நிலையாய் நிற்பன.
- ✓ **பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், பிறன்மனை நோக்காப் பேராண்மை** முதலிய பண்பாட்டு நெறிமுறைகளை வெளிப்படுத்துகின்றன.

**9. உயர் சிந்தனை**

- ✓ யாதும் ஊரே யாவரும் கேளிர் **– புறநானூறு**
- ✓ பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் – **திருக்குறள்**

**10. கலை, இலக்கிய தனித்தன்மை**

- ✓ தமிழ் சான்றோர் மொழியை இயல், இசை, நாடகம் என பிரித்து வளமடைய செய்தனர். மேலும் தமிழர் எளிய குடிமகனையும் குடிமகளையும் காப்பிய தலைவர்கள் ஆக்கி காப்பியம் படைத்தனர்.
- ✓ **அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்** என்று சிலப்பதிகாரம் அறநெறியை உணர்த்துகிறது.
- ✓ சிலப்பதிகாரம் கூறும் கலை நுட்ப செய்திகள் சங்க கால தமிழர்களின் கலை இலக்கிய தனித்தன்மைகளுக்கு சான்றுகளாக திகழ்கின்றன.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**11. மொழிக் கோட்பாடு**

- ✓ தொல்காப்பியர் கூறும் எழுத்து பிறப்பு முறைகள் மொழி நூலாரை வியப்பில் ஆழ்த்துகின்றன.
- ✓ இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணி பின்பற்றத்தக்க வழிமுறைகளை தொல்காப்பியம் கூறுகின்றது. **முனைவர் எமினோ.**
- ✓ ஒரு மொழிக்கு 33 வழிகள் போதுமானது. ஆனால் தமிழ் மொழி 500 மொழிகளைக் கொண்டுள்ளது. கணினி பயன்பாட்டிற்கு ஏற்ற மொழி தமிழ் மொழி.
- ✓ தமிழை செம்மொழியாக அறிவிக்க வேண்டி 1901 இல் தொடங்கி எடுத்த முயற்சிகள் 2004 வரை தொடர்ந்தது.
- ✓ நடுவன அரசு 2004 ஆம் ஆண்டு அக்டோபரில் தமிழை செம்மொழியாக அறிவித்தது.

**⇒ செம்மொழி காலக்கோடு**

- ✓ 1901–ல் மதுரை தமிழ் சங்க இதழான செந்தமிழில் பரிதிமாற் கலைஞரின் உயர் தனிச் செம்மொழி என்ற கட்டுரை வெளியிடப்பட்டது.
- ✓ 1918–ல் மேலை சிவபுரி சன்மார்க்க சபை தமிழை செம்மொழியாக அறிவிக்க வேண்டி தீர்மானம் நிறைவேற்றி, இந்திய அரசுக்கும், இந்திய பல்கலைக் கழகங்களுக்கும் அனுப்பியது.
- ✓ 1918–ல் சைவ சித்தாந்த மாநாட்டில் தமிழை செம்மொழியாக அறிவிக்க வேண்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ✓ 1919–ல் கரந்தை தமிழ்ச் சங்கம் தமிழை செம்மொழியாக அறிவிக்க வேண்டி தீர்மானம் நிறைவேற்றியது.
- ✓ 1966–ல் உயர்தனி செம்மொழி என்னும் ஆங்கில நூல் தேவநேய பாவாணரால் எழுதி வெளியிடப்பட்டது.
- ✓ நடுவன அரசு தமிழை செம்மொழியாக அறிவித்தது.
- ✓ தொல்காப்பியர் காலத்தில் நான் என்ற சொல் கிடையாது யான் என்ற சொல்லே தன்மை ஒருமையை உணர்த்தியது.
- ✓ திருவள்ளுவர் காலத்தில் நேற்று என்ற சொல் கிடையாது நேற்று என்பதை உணர்த்துவதற்கு **நெருநல்** என்ற சொல் பயன்பாட்டில் இருந்தது.
- ✓ கம்பர் காலத்தில் வாங்கு என்ற சொல்லின் பொருள் வளைந்து என்ற பொருளிலேயே வழங்கி வந்தது.



www.tnpscgroup4.in